**ஜூலை – 08**

# TNPSC துளிகள்

- ஹைதராபாத்தைச் சேர்ந்த மருந்து உற்பத்தி நிறுவனமான லாவ்ரஸ் ஆய்வகமானது 2-டி ஆக்சி–டி–குளுக்கோஸ் (2–DG) எனும் கோவிட்-19 மருந்தின் உற்பத்தி மற்றும் விற்பனைக்கான உரிமத்தினைப் பெற்றுள்ளது.
  - லாவ்ரஸ் ஆய்வகத்திற்கான உரிமமானது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பினால் வழங்கப் பட்டுள்ளது.
- பனாசியா பயோடெக் என்ற நிறுவனமானது இமாச்சலப் பிரதேசத்திலுள்ள பாடியில் (Baddi) அமைந்துள்ள தனது மையத்தில் ஸ்புட்னிக் V கோவிட்-19 தடுப்பு மருந்தினைத் தயாரிப்பதற்கு வேண்டி இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டு வாரியத்திடம் இருந்து உரிமத்தினைப் பெற்றுள்ளது.
  - புதுடெல்லியில் அமைந்துள்ள பனாசியா பயோடெக் நிறுவனமானது ரஷ்ய நேரடி முதலீட்டு நிறுவனத்துடன் இணைந்துச் செயலாற்றுகிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## யானைகளின் வாழ்விடங்களை மேம்படுத்த புல்வெளிகள் மற்றும் மரங்கள் உள்ள பகுதிகளை அடையாளம் காணுதல்

- தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மற்றும் வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவை இணைந்து யானைகளின் வாழ்விடங்களை மேம்படுத்த அப்பகுதிகளின் புல்வெளிகள் மற்றும் மரங்கள் நிறைந்த பகுதிகளை அடையாளம் காணுவதற்கான ஒரு திட்டத்தை மேற்கொண்டுள்ளன.
- யானைகளுடைய வாழ்விடங்களின் புல்வெளிப் பகுதிகள் மற்றும் தீவன மரங்கள் உள்ள பகுதிகளை மீண்டும் உருவாக்கி அவற்றைச் சீரமைத்து அதன் தரத்தை உயர்த்துவதே இதன் நோக்கமாகும்.
- இந்தத் திட்டத்திற்காக எட்டு உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்றினை வனத்துறை அமைத்துள்ளது.
- இக்குழுவானது சமீபத்தில் ஓர் இடைக்கால அறிக்கையை சமர்ப்பித்தது.
- அதில் யானைகள் மற்றும் பிற தாவர உண்ணிகள் போன்றவையும் உண்ணக் கூடிய 29 வகை புல் இனங்கள் மற்றும் 14 தீவன மர இனங்கள் அடையாளம் காணப்பட்டு தெரிவிக்கப் பட்டுள்ளன.
- மேலும் இவற்றை வளர்ப்பதற்காக வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் வளாகத்தினுள்ளேயே ஒரு செடிகள் பண்ணை (வளர்ப்பிடம்) ஒன்றும் அமைக்கப் பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## நிலக்கரி உற்பத்தி – இந்தியா

- இந்தியாவின் மொத்த நிலக்கரி உற்பத்தியானது கடந்த நிதி ஆண்டில் 716.084 மில்லியன் டன்களாக குறைந்து 2.02% என்ற அளவிற்குச் சரிவினைக் கண்டுள்ளது.
- சத்தீஸ்கரில் அதிகபட்சமாக 158.409 மில்லியன் டன் நிலக்கரி உற்பத்தியானது

பதிவாகியுள்ளது.

- இதனையடுத்து ஒடிசா (154.150 MT), மத்தியப் பிரதேசம் (132.531 MT) மற்றும் ஜார்க்கண்ட் (119.296 MT) ஆகியவை உள்ளன.

## CoWin உலக மாநாடு

- இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி CoWin உலக மாநாட்டினைத் தொடங்கி வைத்து அதில் உரையாற்றினார்.
- இந்த உலக மாநாட்டில் 142 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்றனர்.
- இந்த மாநாடானது சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம், வெளியுறவு விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் தேசிய சுகாதார ஆணையம் ஆகியவற்றால் இணைந்து நடத்தப்பட்டது.
- இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட தனது CoWin தளத்தினை அனைவருக்குமான ஒரு தளமாக மாற்றுவதற்கு இந்தியா முன்வந்துள்ளதால், இதன் மூலம் அனைத்து (எந்தவொரு) நாடுகளும் இதனைப் பயன்படுத்த இயலும்.

## புதிய ஆளுநர்கள்

- இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் எட்டு மாநிலங்களுக்குப் புதிய ஆளுநர்களை நியமித்துள்ளார்.
- அரசியலமைப்பின் 155 என்ற விதியின்படி, ஒரு மாநிலத்தின் ஆளுநர் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுவார்.
- ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஆளுநர்களை நியமனம் செய்வது ஒன்றிய அரசினுடைய பொறுப்பாகும்.

| Sl.no | State | New Governor |
|---|---|---|
| 1. | Karnataka | Thawarchand Gehlot |
| 2. | Madhya Pradesh | Mangubhai Chhaganbhai Patel |
| 3. | Mizoram | Dr. Hari Babu Kambhampati |
| 4. | Himachal Pradesh | Rajendra Vishwanath Arlekar |
| 5. | Goa | P.S. Sreedharan Pillai |
| 6. | Tripura | Satyadev Narayan Arya |
| 7. | Jharkhand | Ramesh Bais |
| 8. | Haryana | Bandaru Dattatraya |

## BOLD திட்டம்

- இந்தத் திட்டமானது காதி மற்றும் கிராமத் தொழில்துறை ஆணையத்தினால் ராஜஸ்தானின் உதய்ப்பூரில் உள்ள நிச்லா மண்ட்வா எனும் ஒரு பழங்குடியினக் கிராமத்தில் தொடங்கப் பட்டது.

- இந்தத் திட்டத்தின் கீழ் அந்த பகுதியிலுள்ள காலியான, வறண்ட கிராமப் பஞ்சாயத்து நிலத்தில் 5000 சிறப்பு வகை மூங்கில் செடிகள் நடப்பட்டன.
- பாம் பூசாதுல்டா மற்றும் பாம்பூசா பாலிமார்பா எனும் இந்தச் சிறப்பு வகை மூங்கில் செடிகள் அசாமிலிருந்து கொண்டு வரப்பட்டன.
- ஒரே இடத்தில் ஒரே நாளில் அதிக எண்ணிக்கையிலான மூங்கில் செடிகளை நடச் செய்து காதி மற்றும் கிராமத் தொழில்துறை ஆணையமானது (Khadi and Village Industries Commission – KVIC) உலக சாதனையைப் படைத்துள்ளது.
- BOLD என்பதன் விரிவாக்கம் Bamboo Oasis on Lands in Drought (வறட்சியான நிலங்களில் அமைந்த மூங்கில் சோலை) என்பதாகும்.
- இது KVIC அமைப்பினால் தொடங்கப் பட்டது.
- இந்த முன்னெடுப்பானது சுதந்திர தினத்தின் 75வது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுவதற்காக வேண்டி (அசாதி கா அம்ரித் மகோத்சவ் என்ற பெயரில்) KVIC அமைப்பினால் நடத்தப்பட்ட “காதி மூங்கில் திருவிழாவின்” ஓர் அங்கமாக தொடங்கப் பட்டது.
- பாலைவனமாக்கலைக் குறைப்பதற்காக வறண்ட மற்றும் பகுதியளவு வறட்சியுடைய பகுதிகளில் மூங்கில்கள் நிறைந்த பசுமை பகுதியினை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

## டிஜிட்டல் வர்த்தகத்திற்கான பரவலான பிணைய அமைப்பு

- வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்புத் துறையானது டிஜிட்டல் வர்த்தகத்திற்கான பரவலான பிணைய அமைப்பு திட்டத்தினைத் தொடங்கியுள்ளது.
- இந்தப் பணியானது இந்திய தரங்கள் மன்றத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.
- பரவலான அம்சங்கள் மற்றும் பரவலான பிணைய விதிமுறைகளைக் கொண்டு பரவலான மூலங்கள் கொண்ட ஒரு செயல்முறையில் உருவாக்கப்பட்ட பரவலான பிணைய அமைப்புகளை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

# சர்வதேசச் செய்திகள்

## சிறார் படை வீரர்கள் தடுப்புச் சட்டம்

- அமெரிக்கா தனது சிறார் படைவீரர்கள் தடுப்புச் சட்டத்தின் பட்டியலில் இதர 14 நாடுகளுடன் பாகிஸ்தானையும் சேர்த்துள்ளது.
- இந்தப் பட்டியலானது சிறார் படை வீரர்களை படையில் நியமித்துப் பயன்படுத்தும் அரசின் ஆதரவு பெற்ற ஆயுதக் குழுக்களைக் கொண்டுள்ள வெளிநாட்டு அரசுகளை அடையாளம் கண்டு அவற்றைச் சில கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்துகிறது.
- சிறார் படைவீரர்கள் என்ற சொற்கூறானது தீவிரவாத நடவடிக்கைகளில் நேரடியாகப் பங்கேற்கும் அல்லது அரசு ஆயுதப் படைகள், காவல்துறை (அ) இதர பாதுகாப்புப் படைகளில் கட்டாயமாக நியமிக்கப்படும் 18 வயதிற்கும் குறைவான வயதுடைய நபர்களைக் குறிக்கிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## அரசுப் பத்திரங்களின் ஏல முறையில் மாற்றம்

- 2 ஆண்டு, 3 ஆண்டு, 5 ஆண்டு, 10 ஆண்டு மற்றும் 14 ஆண்டு என்ற கால வரையறையினைக் கொண்டுள்ள முக்கிய குறியீட்டுப் பத்திரங்கள் மற்றும் வீத மாற்றுப் பத்திரங்கள் ஆகியவை ஒரு பொது விலை அடிப்படையிலான ஏல முறையில் வழங்கப்படும் என இந்திய ரிசர்வ் வங்கி முடிவு செய்துள்ளது.
- இருப்பினும் 30 ஆண்டு மற்றும் 40 ஆண்டு காலவரையறையுள்ள முக்கிய குறியீட்டுப் பத்திரங்கள் பலவிலை அடிப்படையிலான ஏல முறையிலேயே வழங்கப்படும்.
- அரசுப் பத்திரங்களானவை வர்த்தகம் செய்வதற்கு ஒரு கருவியாக பயன்படுத்தப் படுகின்றன.
- அரசுப் பத்திரங்களானவை மத்திய (அ) மாநில அரசுகளால் வழங்கப் படுகின்றன.
- இது அரசின் கடன்களை அங்கீகரிக்கிறது.
- இரு வகையிலான பத்திரங்கள் உள்ளன.
- குறுகிய காலப் பத்திரங்கள் – இவை கருவூலப் பத்திரங்கள் என அழைக்கப் படுகின்றன.
- இதன் கால வரம்பு ஒரு வருடத்திற்கும் குறைவானதாகும்.
- இது 91 நாள், 182 நாள் மற்றும் 364 நாள் ஆகிய மூன்று காலவரம்புகளில் வழங்கப் படுகிறது.
- நீண்ட காலப் பத்திரங்கள் – இவை வழக்கமாக அரசுப் பத்திரங்கள் அல்லது தேதியிட்ட பத்திரங்கள் என அழைக்கப் படுகின்றன.
- இவற்றிற்கான காலவரம்பு ஒரு வருடத்திற்கும் மேலானது ஆகும்.

## நிதிநிலைத்தன்மை அறிக்கை




- இந்திய ரிசர்வ் வங்கியானது தனது 23வது நிதி நிலைத்தன்மை அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இது ஒரு ஆண்டிற்கு இருமுறை வெளியிடப் படுகிறது.
- இந்தியாவின் பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகளின் மொத்த வாராக் கடன் விகிதமானது 2021-22 ஆம் ஆண்டின் இறுதியில் 11.2% வரை உயரக் கூடும்.

- இது 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 7.48% ஆக இருந்தது.
- அடித்தள வரம்புகளை வைத்து பார்க்கும் போது 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பட்டியலிடப் பட்ட வணிக வங்கிகளின் மொத்த வாராக்கடன் விகிதமானது 9.8% ஆக உயரக்கூடும்.
- இந்த அறிக்கையானது நிதி நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சி மன்றத்தினால் (Financial Stability and Development Council) வெளியிடப் படுகிறது.
- இந்தச் சபையின் தலைவர் மத்திய நிதி அமைச்சராவார்.
- இந்தச் சபையினை உருவாக்குவது பற்றிய கருத்தானது 2008 ஆம் ஆண்டில் ரகுராம் ராஜன் குழுவினால் பரிந்துரைக்கப் பட்டது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## வால்மீகி புலிகள் காப்பகம் – பிகார்

- பீகாரின் வால்மீகி புலிகள் காப்பகத்தின் அதிகாரிகள் வல்லூறுகளைப் பாதுகாப்பதற்கான திட்டங்களை வகுக்கத் தொடங்கியுள்ளனர்.
- இந்த பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் சமீபத்தில் 150 கழுகுகள் தென்பட்டதை அடுத்து இது திட்டமிடப் பட்டுள்ளது.
- இந்தப் புலிகள் காப்பகமானது இந்தியாவிலுள்ள இமாலய தராய் வனப்பகுதிகளின் கிழக்கத்திய வரம்பினை உள்ளடக்கியுள்ளது.
- இது நமது நாட்டின் கங்கைச் சமவெளி சார்ந்த உயிரிப் புவியியல் மண்டலத்தில் அமைந்துள்ளது.
- இந்த வனப்பகுதியில் பாபர் மற்றும் தராய் வகை படுகைகளும் உள்ளன.
- இந்திய பிளையிங் ஃபாக்ஸ் எனப்படும் வௌவால்களும் இங்கு காணப் படுகின்றன.
- இந்தியாவில் ஒன்பது வகை வல்லூறு இனங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

**BIRD'S EYE VIEW**

**9 RECORDED SPECIES:** Oriental white-backed, long-billed, slender-billed, Himalayan, red-headed, Egyptian, bearded, cinereous and the Eurasian Griffon.

(4 CRITICALLY ENDANGERED, 1 ENDANGERED, 3 NEAR THREATENED)

**THE CRISIS:** A massive dip in vulture populations came into limelight in the mid-90s, and in 2004 the cause of the crash was established as diclofenac, a veterinary nonsteroidal anti-inflammatory drug.



**WHAT NEXT AFTER 2006 PROJECT:**

- Testing of nonsteroidal anti-inflammatory drugs on vultures, development of new NSAIDs
- Covering two more species in the breeding programme that earlier focussed on 3 critically endangered species
- Additional conservation breeding centres and four rescue centres planned across India
- Nationwide vulture survey once in four years

# விளையாட்டுச் செய்திகள்

## இந்தியத் தேசியக் கொடியினை ஏந்தி அணியை வழி நடத்தும் வீரர்கள்

- ஆறுமுறை உலக குத்துச்சண்டை சாம்பியன்சிப் பட்டம் வென்ற MC மேரி கோம் மற்றும் ஆடவர் ஹாக்கி அணித் தலைவர் மன்பிரீத் சிங் ஆகியோர் ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழாவில் இந்தியாவின் தேசியக் கொடியைச் சுமந்து அணியை வழி நடத்த உள்ளனர்.
- ஆகஸ்ட் 08 அன்று நடைபெறும் நிறைவு விழாவில், 2018 ஆம் ஆண்டு உலக மல்யுத்த சாம்பியன்சிப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற பஜ்ரங் பூனியா தேசியக் கொடியைச் சுமந்து அணியை வழி நடத்துவார்.
- "பாலினச் சமத்துவத்தை" உறுதி செய்வதற்காக முதன்முறையாக ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் உள்ளிட்ட இருவரை தேசியக் கொடியினைச் சுமந்து அணியினை வழி நடத்தச் செய்து, வரவிருக்கும் டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்திய அணி பங்கேற்க உள்ளது.




## ஜேம்ஸ் ஆன்டெர்சன் – 1000வது விக்கெட்




- இங்கிலாந்தின் மூத்த வேகப்பந்து வீச்சாளரான ஜேம்ஸ் ஆண்டெர்சன் முதல் வகை

கிரிக்கெட் போட்டிகளில் தனது 1000வது விக்கெட்டினை வீழ்த்தியுள்ளார்.

- மான்செஸ்டரில் நடைபெற்ற கென்ட் அணிக்கு எதிரான லாங்கசைர்ஸ் கவுண்ட்டி சாம்பியன்சிப் போட்டியில் இந்தச் சாதனையானது நிகழ்த்தப் பட்டது.
- டெஸ்ட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை எடுத்து வேகப்பந்து வீச்சாளர்களுள் ஆண்டெர்சன் முன்னிலை வகிக்கிறார்.
- ஆண்டெர்சன் இந்த நூற்றாண்டில் முதல் வகை கிரிக்கெட் போட்டியில் 1000வது விக்கெட்டினை நிகழ்த்திய 14வது விளையாட்டு வீரர் மற்றும் 5வது வேகப்பந்து வீச்சாளர் ஆவார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★